39. மூன்றுகுணத்தினாலே தோன்றுமுலகந்தன்னை
முசல்கொம்புபோல பாரென்பர்
40. வேதமுடன் சாஸ்திரங்கள் வித்தை அறுபத்திநாலும்
கற்றும்ஜன்மம் போகாதென்பர்
41. ஐந்தெழுத்து முதலான சப்தகோடி மந்திரத்தால்
சித்தத்தின்பிரமை போகாதென்பர்
42. விதிநிஷேத மன்னியிலே சாந்தியுடனே இருந்தால்
(பர) வொளிதன்னைக் காணலாமென்பர்
43. இருதயமான ஆகாசத்தில் உதயமானால் சூரியனும்
இரவுபகல் இரண்டில்லையென்பர்
44. ஆசையுடன் மோகமற்று அனைவரையும் ஒன்றாய்ப்பார்த்தால்
அப்போஜென்மம் வாராதென்பர்
45. ஆசையற்ற சுகம்போல வேறுசுக மில்லையென்பர்
அனுபோகமாகப் பாரென்பர்
46. விஷயமற்ற சுகம்போல வேறேசுக மில்லையென்பர்
மெய்யோ பொய்யோ நீயேபாரென்பர்
47. மித்ராளை விடுயென்பர் பந்துக்களை ஜெயியென்பர்
வீடுமாடு அசத்தியமென்பர்
48. சத்துருவும் மித்துருவும் சமனாகப் பாரென்பர்
தரணியெல்லாம் ஒன்றுதானெனன்பர்
49. உத்தம பக்தர்களுக்கு குருசொன்ன வாக்யத்தால்
ஸ்வாநுபோக முண்டாகியே
50. பரிபக்குவ சித்தாளான சனகாதி யோகியர்க்கு .
சத்குருவின் வாக்கியத்தாலே
51. (பர)வஸ்துநின்று சொல்லிவந்த மகாபோத வாக்கியத்தின்
தத்துவத்தை உற்றுக்கேட்டவாள்
52. சத்குருவின் கிருபையாலே சந்தேகங்கள் தோன்றாமல்
ததாகாரமாய் விளங்கினார்.

---

## ஸ்ரீ பார்வதியம்மன் அவதாரம்

இப்படியாகப் பரமசிவனும் தக்ஷிணாமூர்த்தமாய்த் தானிருக்க பர்வதராஜரும் மேனையுமாய் பக்தியுடன் பராசக்திதன்னை நித்தியகல்யாணி ஜெகன்மாதா புத்திரியாய் வந்துமுக்திதர சித்தந்தன்னிலே ஸ்மரித்துக்கொண்டு நித்தியமாகத் தபசிருந்தார்.

ரத்னமயமானபர்வதத்தில் பொற்றாமரை ஓடக்கரையிலே
தப்பாமல் மிக பக்தியுடன் தேவியைநோக்கித்தவமிருந்தான்
உத்தமமான அவர்கள் தபஸை உகந்துகொண்டு மஹாதேவி

அற்புதமான ஓடையிலே ஆயிரந்தளத்தின் நடுவிலே
பூராக்ஷத்திரந்தன்னிலே அம்மன் பெருமத்தியான வேளையிலே
நாளும் ராசி நல்ல லக்னம் கூடிக்கிரகமும் பூரணமாய்
யோகந்தன்னிலே கோடிசூரியன் உதயமான காந்திபோல்
தேவிதாமரைப்பூவிலுதித்தாள் திக்கெட்டும் ஒளிவிளங்கவே
நாற்பத்து முக்கோணச்சக்கரத்தில் (நல்ல)நாளையில்வந்து அவதரித்தாள்
முப்பத்து முக்கோடி தேவரெல்லாம் புஷ்பமாரி சொரிந்து நின்றார்
அப்போ பர்வதராஜரும் மேனையும் அந்தக்குழந்தை வடிவுகண்டு
சிந்தித்து நாமிப்போ செய்த தபஸுக்கு வந்து உதித்தாள் குழந்தையாக
அந்தமுமாதியும் அற்ற பரா சக்தியென்றே அறிந்துகொண்டு

மெய்யாயிருந்த பரப்பிர்மமிப்போ பொய்யான தேகமெடுத்தாளென்று
கையாலேவாரி எடுத்தணைத்துக்கொண்டு ஒய்யாரமாக விடுதிவந்தாள்
குந்தளநாயகி அம்மனுக்கு மங்களஸ்நானமும் பண்ணிவைத்தாள்
தங்கமயமான பீதாம்பரத்திலே சங்கரிதேவியை சேர்த்தணைத்து [டார்
அன்புடன் ராஜாவும் அடிமடியில் மந்தகாசத்துடன் வைத்துக்கொண்
முக்கண்ணர் தேவிக்குநாமகருமம் விஸ்தாரமாய்ச் செய்யவேணுமென்று
அச்சுதர் தங்கைவலச்செவியில் இச்சையுடனந்தராஜாவும்
தேவி பார்வதியென்று சொல்லியவர் தானுரைத்தார் மூன்றுதரம்
பார்வதியென்று பேருமிட்டு அந்த பர்வதராஜர் மனமகிழ்ந்தார் [தார்
பத்திபெரிதான மேனையிடத்திலே நித்தியகல்யாணியைத் தான்கொடுத்

இஷ்டமுடனவள் வாங்கிக்கொண்டு ஈஸ்வரியை முத்தமிட்டுக்கொண்டு
பக்ஷமுடனேவலது முலைப்பாலை பார்வதிதேவிக் கவள்கொடுத்தாள்
அப்போதந்த ஹிமவானும் ஆயிரம்யானை குதிரைகளும்
முத்தும்பவழமும் ரத்தினங்களும் விரையுடன்வெள்ளி சொர்ணங்களும்
நித்தியமொருகுடம் பால்கறக்கும் இலக்கமற்ற பசுமாடுகளும்
மட்டில்லாதவெகு தானதருமங்கள் வாரிவழங்கினர் ராஜாவும்
நித்தியகல்யாணியைக் கண்டுமவாள் நித்தியானந்த மடைந்திருந்தாள்
மையிட்டுப் பொட்டிட்டு மஞ்சட்பூசி பட்டமும்நெற்றியில் சுட்டிகட்டி

பதினாலு லோகமும் படியளக்கும் பார்வதியோ
வெள்ளெருது மேலேறி வெள்ளொளிமாய் நீறணிந்து
துன்னுமான் கைபிடித்த சங்கரனார் தேவியரோ
ஆராரோ ஆராரோ ஆரிவரோ ஆராரோ
பாராளும் மேனையுட பாக்கியமே கண்வளராய்
பக்ஷமுடனே தாராட்டி சீராட்டிப் பார்வதிதேவி வளர்ந்துவந்தாள்.

---

## ஸ்ரீபார்வதியம்மன் பாலலீலை

பூர்வபக்ஷத்துச் சந்திரன்போ லம்மன் பூரணமாக வளர்ந்துவந்தாள்
வளர்பிறையின் சந்திரன்போ லம்மன் வடிவமைந்து வளர்ந்துவந்தாள்
மூன்றுமாஸத்தி லம்மனவள் முகம்பார்த்துச் சிரிக்கலுற்றாள்
நான்காமாஸத்தி லம்மனவள் நவரத்தினமயமான தொட்டிலிலே
கொஞ்சுங்கிளிபோல புன்சிரிப்புடனே கோமளரூபி அரிதுயின்றாள்
ஐந்தாமாஸத்தி லம்மனவள் கொஞ்சிக்குலாவி முகம்பார்த்தாள்
ஆறுமாஸத்தி லம்மனவள் ஆயிரக்கால் மணிமண்டபத்தில்
மாரில்பதக்கம் பளபளென்ன மாரால்நகர்ந்து விளையாடினாள்
ஏழாமாஸத்தி லம்மனவள் எங்குந்தவிழ்ந்து விளையாடினாள்
எட்டாமாஸத்தி லம்மனவள் எட்டியடிவைத்துச் சித்தடியால்
தந்தைமகிழத் தாயார்மகிழ தத்தடியிட்டு விளையாடினாள்
ஒன்பதாமாஸத்தி லம்மனவள் ஓடிநடந்து விளையாடினாள்
பத்தாமாஸத்தி லம்மனவள் பாங்காய்க்கைகளை யாட்டிக்கொண்டு
தாராராமா காட்டிக்கொண்டு சந்திரன்காட்டி விளையாடினாள்.
இரண்டாம் வயதுதன்னில் நேரிழையாள் பார்வதிதேவி
தண்டைசிலம்பு சலங்கலென்க தத்தடியிட்டு விளையாடினாள்
மூன்றும்வயதி லம்மனவள் முச்சியெடுத்துக் கையிற்பிடித்து
சொர்ணமும்முத்தும் கொழித்தெடுத்துத் தோழியுடனே விளையாடினாள்
நாலாம்வயதி லம்மனவள் நாலைந்து தோழியுடன்கூடி [கொண்டு
பொன்னுங்கழக்கோடி யாடிக்கொண்டு பூப்போட்ட சித்தாடைக்கட்டிக்
பட்டுரவிக்கையும் போட்டுக்கொண்டு முத்தாபரணங்கள் பூட்டிக்
பர்வதர்மேனையும் கண்டுமகிழ பாங்கியருடன் விளையாடினாள் [கொண்டு
ஐந்தாம்வயதி லம்மனவள் ஐந்தாறுதோழி மார்களுடனே
கஞ்சதள நேத்திரமுடையாள் மஞ்சுளபூஷணம் பூட்டிக்கொண்டு
குழல்கத்தைகளும் தொங்கத்தொங்க கழுத்திலாப ரணங்கள்மின்ன
பந்துவிளையாடித் தோழிமார்களுடன் பாலலீலைகளும் செய்து வந்தாள்

## சிவன் ஏச்சு.

## ஸ்ரீ பார்வதியின் தோழிகள்
## பரமேசரிடம் பாடிப் பணம் வாங்குதல்.

*அகப்பட்டுக்கொண்டீரே சிவனே ஐந்துமுகத்தையுடையவரே*
*ஆறெட்டுக்கைக்குறைந்தவளைக்கண்டு அறிந்தவளுக்காசைப்பட்டவரே*
*நீறிட்டநெற்றிக்கண்ணாலே காமனை நீறாய் எரித்தவரே*
*பேரிட்டுஆதரவோடு அழைக்கப்பெற்றாரும் உற்றாரும் அற்றவரே*
*குடியிருக்கவீடற்றவரே குஞ்சரத்தோலையுடுத்தவரே*
*வடிவழகிக்கு ஆசைப்பட்டு நரைக்கிழவனாய் வந்தவரே*
*ஒப்பில்லாதவரே சிவனே சக்திக்குநப்பாசைப்பட்டவரே*
*அம்மனை நெஞ்சில் நினைத்துக்கொண்டு ஆம்பிடையாளாக வேணுமென்று*
*சாம்பலை மேனியில் பூசிக்கொண்டு தொண்டுகிழவனாய் வந்தவரே*
*பரமரிஷிகள் பெண்டுகளின் பங்கம்குலையக் கெடுத்தவரே*
*சாக்கியநாயனார் பூஜையினில் கல்லினாலெறியப்பட்டவரே*
*பாணாஸுரன் செய்த பூஜைகண்டு வரமது கேட்டதெல்லாங்கொடுத்து*
*சேவகரைப்போல் அஸுரன் அரண்மனைவாசலைக் காவலாய்காத்தவரே*
*வேடரூபமெடுத்துக்கொண்டு விஜயனுடன்கூட யுத்தம்பண்ணி*
*பார்த்தன்கையினால் வில்லடிபட்டு பாசுபதாஸ்திரங் கொடுத்தவரே*
*மூத்தபிள்ளை கணபதிக்கு முந்தி வேட்கவரைக் காசுமன்றியிலே*
*காத்திரு சந்திக்கரையில் கன்னிகை கண்டாலழைத்துவாவென்றவரே*
*நல்ல மிருகண்டு குமாரனுக்கு நால்வரறிய வரங்கொடுத்து*
*பாலகருடைய பக்திக்கிரங்கியே என்றும்பதினாறு என்றவரே*
*நீலவிஷத்தைப் புஜித்தவரே காலனைக் காலால் உதைத்தவரே*
*ஏறிக்கொண்டு உலகத்தைச்சுற்றவே விமானங்கள்வேறொன்றும் இல்லாமலே*
*மூரியானதோர் எருதுமாட்டின்மேல் ஏறிக்கொண்டு திரிந்தவரே*
*பூதப் பிரேதப் பிசாசுகளோடு கூடிக்கூடி குலாவிக்கொண்டு*
*சூடிக்கொண்டு எருக்கம்பூமாலையை சித்துமயமாய்த் திரிந்தவரே*
*பிட்சை இரந்து குடிக்க ஒருபாத்திரம் கொள்ளப்பணங் காசுமின்றியிலே*
*கப்பரையான கபாலத்திலே யன்னம் பட்டணமெங்கும் இரந்தவரே*
*பிக்ஷயன்னத்தைக்கூட்டிப்புஜிக்கப் பொரிக்கறிகொள்ளவேகாசுமற்று*
*பக்தனை சிறுத்தொண்டர் வீட்டிலே பிள்ளைக்கறி சமை என்றவரே*
*அப்படியாகட்டும் என்றொரு பிள்ளையை அறுத்தவர் கறியாக்கலுமே*
*இஷ்டமான தலைக்கறியில்லாவிட்டால் அன்னம்புஜியேன் என்றவரே*
*சட்டமாகச் சமைத்துச் தலைக்கறி சந்தனதாவி கொடுக்கலுமே*

புத்திரன் என்னுடன்கூட உண்ணவிட்டால் அன்னம்புஜியேன் என்றவரே
பெற்றதெல்லாம் ஒருபிள்ளை ஸ்வாமி அறுத்துக்கறி சமைத்தாக்கிவிட்டேன்

அத்தனே நானென்ன செய்வேனென்று அப்போ சிறுத்தொண்டர்
பக்தன்புலம்பும் பரிதாபங்கேட்டு சித்தமிரங்கியே நீருமப்போ [சொல்லுமே
புத்திரன் பள்ளிக்கூடத்திலிருக்கிறான் போயழைத்துவாவென்றவரே
பக்தியுடனே பள்ளிக்கூடத்தி லிருந்த சீராளனைக் கூப்பிடவே
உச்சிதமாகவே பிள்ளைபிழைத்திட இஷ்டம் நிறைவேற்றி வைத்தவரே
பத்மாஸுரன் தபசைக்கண்டு பதறிவரத்தைக் கொடுத்துவிட்டு
தொட்டுப்பார்ப்பேன் சிவன்தலையை (என்று) தொடர்ந்து பிடித்தவன் ஓடிவர
பட்டுப்போகுமஸுரனைக்கண்டு பயந்துநடுங்கி விழித்துக்கொண்டு [கொண்டு
செத்துப்போகப் படாதென்று எண்ணி ஜெகத்தின் வனமெல்லாமோடிக்கொ
ஓட்டிக்கொண்டு அந்தஜவேலிக்காயிலே ஒளிந்துகொண்டு இருந்தவரே [ண்டு
(நீரும்) மறைந்தவுடன் வைகுண்டவாஸியும் மோகினிவேஷமெடுத்துக்
அஸுரனண்டைக்கு வரவச்சுதானந்தர் அதிரூபமான மோகினியாய் [றான்
மதிகெட்டஸுரன் மோகினியைப்பார்த்து வாரும்பெண்ணே சதியாகவென்
வாரும்பெண்ணே சதியாகவென்றவுடன் வைகுண்ட வாஸியுந்தான் கேட்டு
நித்திய கர்மத்தைப் பண்ணிமுடித்து நிர்மலமாக வாவென்றசொன்னார்
கவிட்டுக்கோவிந்தன் சொன்னதறியாமல்-காமாட்டியாகிய மூட அஸுரன்
முழுகியெண்ணீறு முந்திவினைமுற்ற முடியின்மேல் கையைவைத்துக்கொண்
முடியின்மேல் கையைவைத்தவுடனே பிடிசாம்பலாகஎரிந்துவிட்டான் [டான்
வரங்கொடுத்த மகாதேவர் சொற்படி வெடித்தவன் தலை நீறுச்சு
பத்மாஸுரனும் பட்டுவிழுந்திட அச்சுதருட அருகில்வந்தீர்

அதையறிந்த ஹரியுமப்போ அற்புத மோஹினியாகி நிற்க
அச்சுதமோகினி வேஷத்தைக்கண்டு ஹரியுடன் போகமடைந்தவரே
போகமடைந்த மதத்தினுல்சங்கரர் வீரியமுதிக்கக் காந்தியாய்
பிரகாசத்துடனே விளங்கிய ரேதஸை ஸ்ரீ ஹரிகைதனில் ஏந்திக்கொண்டார்
ஸ்ரீஹரிக்கும் அரனுக்குமாகிய செல்வக்குமாரனைத் தாராட்டி
ஆதிசிவனும் ஹரியுமாகக்கூடி ஐயப்பருச்சியை முகந்துகொண்டு
ஸ்ரீமானரி ஹரபுத்திரனென்று நாலுலோகமும் அறியவைத்தீர்
பூமிக்கெல்லாம் இவர்காவற்காரனென்று வாகினியும் அவர்கைக்கொடுத்தீர்
நாடகமாடியே லோகத்தைமயக்கும் ஆதிசிவனை யறியோமோ
வாஸுகி தக்ஷகன் கார்க்கோடகனை மகரகுண்டலமாய்ப் போட்டுக்கொண்டு

காளியன் முதல் சகலநாகத்தையும் கண்டாபரணமாய்ப் பூண்டவரே
வாதவூரடிகள் பக்திகண்டு வன்சிறை நீக்கவே எண்ணங்கொண்டு

மத்தகஜங்கட்டி சகடைநாலுள்ள மாணிக்கப்பொன்தேர்களில்
சித்தடிவைத்துத் தேறின்மேலேறி தோழமாருடன் கூடியே
பொற்பாதத்தினால் குந்துப்பிடித்து பிரிந்துநின்று பந்தடித்தவாள்
ஒருத்தருக்கொருத்தர் கோத்துக்கைகளை கட்டுந்தோரணம் போலநின்று
கட்டுக்கண்ணும்பூச்சிபொத்தி காணுமலோடி மறைந்தவாள்
உக்கிரமாக இரைந்துவெளிவந்து ஓடியேவிளையாடினாள்
கோடிமன்மதரூபமான கொஞ்சுங்குமாரனும் கோலத்துடன்
ராஜவீதியில் ஓடிவிளையாடி நவவீரர்லக்ஷஞ் சேனையுடன்

1560. வீசிவீசித்தெருவில் நடந்து விழிகளில் மிரட்டிக்கொண்டு
உலகத்திலுள்ள கன்னிகைமார்களும் மோகிக்க விளையாடினார்
விருத்தவேஷமெடுத்துக்கொண்டு முக்கிக்கொண்டு தடிஊணிக்கொண்டு
பொக்குப்பொக்கென்று இருமிக்கொண்டு பொட்டையைப்போல்கண்ணைமூடிக்
எப்படியப்பா வழிசொல்லுங்களென்று அப்படியும் விளையாடினார் [கொண்டு
பச்சைக்குதிரையின் மேலேறி பொன்னுங் கடிவாளங் கைப்பிடித்து
இந்திரருலகம் சந்திரருலகம் எல்லா உலகமும் சுற்றிவந்தார்
பட்டணமெங்கிலும் சுற்றியேமணியர் பரிபூரணமாய் விளையாடினார்
பச்சைக்குதிரையை விட்டிறங்கிவந்து பார்வதிதேவியைத் தான்பணிந்தார்
வந்துபணிந்த பாலகரை கண்டுமகிழ்ந்து பார்வதிதேவியும்

15[illegible]0. கைலாஸநாதர் புத்திரனுக்குக் கற்பூரஹாரத்திக் காப்பெடுத்தாள்
திருஷ்டிதோஷங்கள் வாராமல்தேவியும் திருவந்திக்காப்புத் தானெடுத்தாள்
கற்பூரநாயகி கண்டுகளித்து ஒக்கலையில் தூக்கிவைத்துக்கொண்டாள்
முத்துகுமாரனை ஆறுமுகனை முத்தமிட்டுக் கண்ணிலொற்றிக்கொண்டு
நெற்றியிற்கண்ணைப்படைத்த சிவனிடம்நித்தியகல்யாணியுந்தான்கொடுத்தாள்
அர்த்தனாரீசரும் வாங்கிக்கொண்டு ஆனந்தமாரோடணைத்துக்கொண்டு
உச்சியை சங்கரர் மோந்துக்கொண்டு உல்லாசமாக அணைத்துக்கொண்டு
உற்றுற்றுப்பார்த்து மகிழ்ந்துகொண்டு ஈசர்உமைக்கும் நடுவினிலே
முத்துக்குமாரனை வைத்துக்கொண்டு நித்தியானந்த மடைந்திருந்தாள்

---

## சத்திவேலாயுதமூர்த்தி சூரபத்மன் முதலியோரை ஸம்ஹாரித்தல்.

அப்புறமுஞ்சிலநாட்கள் கழிந்தபின் சுக்கிலபக்ஷத்துச் சந்திரன்போல்
1580. உச்சிதமாக உயர்ந்துவளர்ந்த சுப்பிரமண்யரைக் கண்டமரர்கள்
குட்டிக்கரங்களைக் கூப்பிக்கொண்டு சிவசங்கரரே கிருபைபாருமென்றார்கள்

